©
GOVERNMENT OF TAMIL NADU
2020

[Regd. No. TN/CCN/467/2012-14.
[R. Dis. No. 197/2009.
[Price: Rs. 2.40 Paise.

# TAMIL NADU GOVERNMENT GAZETTE

PUBLISHED BY AUTHORITY

No. 3] CHENNAI, WEDNESDAY, JANUARY 15, 2020
Thai 1, Vikari, Thiruvalluvar Aandu–2051

## Part II—Section 2

**Notifications or Orders of interest to a section of the public issued by Secretariat Departments.**

### NOTIFICATIONS BY GOVERNMENT

CONTENTS

| | Pages. |
|---|---|
| LABOUR AND EMPLOYMENT DEPARTMENT | |
| Industrial Disputes Act.—Declaration of “Newsprint and Paper Manufacturing Industry” as Public Utility Service .. .. .. .. .. | 20 |
| Industrial Tribunal for Adjudication .. .. .. .. .. | 20 |
| Labour Courts for Adjudication .. .. .. .. .. | 20-23 |

Verified RealEstate™

## NOTIFICATIONS BY GOVERNMENT

LABOUR AND EMPLOYMENT DEPARTMENT

**Declaration of "Newsprint and Paper Manufacturing Industry" as Public Utility Service under the Industrial Disputes Act.**

*[G.O. (Rt). No. 390, Labour and Employment (D2), 23rd December 2019, Margazhi 7, Vikari, Thiruvalluvar Aandu-2050.]*

No.II(2)/LE/40/2020.—WHEREAS the Governor of Tamil Nadu is satisfied that public interest requires that the "Newsprint and Paper Manufacturing Industry" should be declared as public utility service for the purposes of the Industrial Disputes Act, 1947 (Central Act XIV of 1947);

NOW, THEREFORE, in exercise of the powers conferred by sub-clause (vi) of clause (n) of Section 2 of the said Act, the Governor of Tamil Nadu hereby declares the "Newsprint and Paper Manufacturing Industry" to a public utility service for the purposes of the said Act for a period of six months with effect on and from the date of publication of this Notification in the *Tami Nadu Government Gazette*.

**Disputes between Workmen and Managements referred to Industrial Tribunal for Adjudication.**

**ஈ.ஐ.டி பாரி (இந்தியா) லிமிடெட், புகளூர், கரூர் மாவட்டம்.**

*[அரசாணை (டி) எண் 688, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (பி2)த் துறை, 27 நவம்பர் 2019, கார்த்திகை 11, விகாரி, திருவள்ளுவர் ஆண்டு–2050.]*

No.II(2)/LE/41/2020.—இந்த ஆணையின் இணைப்பில் குறிப்பிட்டுள்ள பொருள் தொடர்பாக, ஈ.ஐ.டி பாரி (இந்தியா) லிமிடெட், புகளூர் கரூர் மாவட்டம் என்ற நிர்வாகத்திற்கும், கரூர் மாவட்ட புகளூர் சர்க்கரை ஆலை தொழிலாளர் நலச் சங்கம், கரூர் மாவட்டம் என்ற தொழிற்சங்கத்திற்குமிடையே தொழிற்தகராறு எழுந்துள்ளது என்று அரசு கருதுவதாலும்;

மேற்சொன்ன தொழிற்தகராறை தொழிற் தீர்ப்பாயத்தின் தீர்விற்கு அனுப்புவது அவசியமென்று தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் கருதுவதாலும்;

**1947–ஆம்** ஆண்டு தொழிற்தகராறுகள் சட்டத்தின் (மத்திய சட்டம் XIV/1947) **10(1)(c)** பிரிவிலும், **10(1)(d)** பிரிவின் வரம்பு நிபந்தனையிலும் வழங்கியுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் மேற்சொன்ன தொழிற் தகராறு, இணைப்பில் காணும் எழுவினாவுடன், சென்னை தொழிற் தீர்ப்பாயத்தின் தீர்விற்கு அனுப்பப்பட வேண்டும் என்று இதனால் ஆணையிடுகிறார்.

மேலும், **1947–ஆம்** ஆண்டு தொழிற் தகராறுகள் சட்டத்தின் **10(2A)** பிரிவின்கீழ், இந்த ஆணையைப் பெற்றுக்கொண்ட நாளிலிருந்து மூன்று மாதங்களுக்குள் தீர்ப்பு அளிக்குமாறு சென்னை, தொழிற் தீர்ப்பாயத்தைக் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

**இணைப்பு**

**எழுவினா**

**கோரிக்கை எண் 2.**

தாவாவில் சம்பந்தப்பட்ட தொழிலாளர்களுக்கு பணிமூப்பு அடிப்படையில் மட்டுமே பதவி உயர்வு, ஊதிய உயர்வு வழங்கப்படவேண்டும் என்ற தொழிற் சங்கத்தின் கோரிக்கை நியாயமானதா?

ஆம் எனில், உரிய உத்தரவுகள் பிறப்பிக்கவும்.

**Disputes between Workmen and Managements referred to Labour Courts for Adjudication.**

**தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (கோவை கோட்டம்) கோவை.**

*[அரசாணை (டி) எண் 731, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (டி1)த் துறை, 11 டிசம்பர் 2019, கார்த்திகை 25, விகாரி, திருவள்ளுவர் ஆண்டு–2050.]*

No.II(2)/LE/42/2020.—இந்த ஆணையின் இணைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள பொருள் தொடர்பாக, தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (கோவை கோட்டம்), கோவை என்ற நிர்வாகத்திற்கும் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழக சீருடை பணியாளர் தொழிற் சங்கம், கோவை என்ற தொழிற்சங்கத்திற்குமிடையே தொழிற்தகராறு எழுந்துள்ளது என்று அரசு கருதுவதாலும்;

மேற்சொன்ன தகராறை எழுவினாவுடன் கோவை தொழிலாளர் நீதிமன்றத்தின் தீர்ப்புக்காக அனுப்புவது அவசியமென்று தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் கருதுவதாலும்;

**1947–ஆம்** ஆண்டு தொழிற் தகராறுகள் சட்டத்தின் (மத்திய சட்டம் XIV/1947) **10(1)(c)** பிரிவிலும், **10(1)(d)** பிரிவின் வரம்பு நிபந்தனையிலும் வழங்கியுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் மேற்சொன்ன தகராறை, எழுவினாவுடன் கோவை தொழிலாளர் நீதிமன்றத்தின் தீர்ப்புக்காக அனுப்பப்பட வேண்டும் என்று இதனால் ஆணையிடுகிறார்.

மேலும், **1947–ஆம்** ஆண்டு தொழிற்தகராறுகள் சட்டத்தின் **10(2A)** பிரிவின்கீழ், இந்த ஆணையைப் பெற்றுக்கொண்ட நாளிலிருந்து மூன்று மாதங்களுக்குள் தீர்ப்பு அளிக்குமாறு கோவை தொழிலாளர் நீதிமன்றம் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

**இணைப்பு**

**எழுவினா**

திரு. B. தியாகராஜன், (ப. எண் B 05457) தொழில்நுட்ப பணியாளருக்கு நிர்வாகம் பிறப்பித்த 28–06–2017 நாளிட்ட உத்தரவுப்படி 2017 ஜூலை மாத சம்பளத்தில் ரூ. 200/–ஐ பிடித்தம் செய்ததை திரும்ப வழங்க வேண்டும் என்ற தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயமானதுதானா?, ஆம் எனில், உரிய உத்தரவு பிறப்பிக்கவும்.

*[அரசாணை (டி) எண் 738, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (டி1)த் துறை, 12 டிசம்பர் 2019, கார்த்திகை 26, விகாரி, திருவள்ளுவர் ஆண்டு–2050.]*

No.II(2)/LE/43/2020.—இந்த ஆணையின் இணைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள பொருள் தொடர்பாக, தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (கோவை கோட்டம்), கோவை என்ற நிர்வாகத்திற்கும் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழக சீருடை பணியாளர் தொழிற் சங்கம், கோவை என்ற தொழிற்சங்கத்திற்குமிடையே தொழிற்தகராறு எழுந்துள்ளது என்று அரசு கருதுவதாலும்;

மேற்சொன்ன தகராறை எழுவினாவுடன் கோவை தொழிலாளர் நீதிமன்றத்தின் தீர்ப்புக்காக அனுப்புவது அவசியமென்று தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் கருதுவதாலும்;

**1947–ஆம்** ஆண்டு தொழிற்தகராறுகள் சட்டத்தின் (மத்திய சட்டம் XIV/1947) **10(1)(c)** பிரிவிலும், **10(1)(d)** பிரிவின் வரம்பு நிபந்தனையிலும் வழங்கியுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் மேற்சொன்ன தகராறை, எழுவினாவுடன் கோவை தொழிலாளர் நீதிமன்றத்தின் தீர்ப்புக்காக அனுப்பப்பட வேண்டும் என்று இதனால் ஆணையிடுகிறார்.

மேலும், 1947–ஆம் ஆண்டு தொழிற்தகராறுகள் சட்டத்தின் 10(2A) பிரிவின்கீழ், இந்த ஆணையைப் பெற்றுக்கொண்ட நாளிலிருந்து மூன்று மாதங்களுக்குள் தீர்ப்பு அளிக்குமாறு கோவை தொழிலாளர் நீதிமன்றம் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

**இணைப்பு**

**எழுவினா**

திரு. V. மணிகண்டன் ஓட்டுனருக்கு (ப.எண் சி 23745) நிர்வாகம் வழங்கிய 29–07–2017 தேதியிட்ட உத்தரவுப்படி 2017 ஆகஸ்ட் மாத சம்பளத்தில் ரூ. 1,250/–ஐ பிடித்தம் செய்த உத்தரவை இரத்து செய்ய வேண்டும் என்ற தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயமானதுதானா? ஆம் எனில், உரிய உத்தரவு பிறப்பிக்கவும்.

*[அரசாணை (டி) எண் 753, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (டி1)த் துறை, 17 டிசம்பர் 2019, மார்கழி 1, விகாரி, திருவள்ளுவர் ஆண்டு–2050.]*

No.II(2)/LE/44/2020.—இந்த ஆணையின் இணைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள பொருள் தொடர்பாக, தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (கோவை கோட்டம்), கோவை என்ற நிர்வாகத்திற்கும் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழக சீருடை பணியாளர் தொழிற் சங்கம், கோவை என்ற தொழிற்சங்கத்திற்குமிடையே தொழிற்தகராறு எழுந்துள்ளது என்று அரசு கருதுவதாலும்;

மேற்சொன்ன தகராறை எழுவினாவுடன் கோவை தொழிலாளர் நீதிமன்றத்தின் தீர்ப்புக்காக அனுப்புவது அவசியமென்று தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் கருதுவதாலும்;

1947–ஆம் ஆண்டு தொழிற்தகராறுகள் சட்டத்தின் (மத்திய சட்டம் XIV/1947) 10(1)(c) பிரிவிலும், 10(1)(d) பிரிவின் வரம்பு நிபந்தனையிலும் வழங்கியுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் மேற்சொன்ன தகராறை, எழுவினாவுடன் கோவை தொழிலாளர் நீதிமன்றத்தின் தீர்ப்புக்காக அனுப்பப்பட வேண்டும் என்று இதனால் ஆணையிடுகிறார்.

மேலும், 1947–ஆம் ஆண்டு தொழிற்தகராறுகள் சட்டத்தின் 10(2A) பிரிவின்கீழ், இந்த ஆணையைப் பெற்றுக்கொண்ட நாளிலிருந்து மூன்று மாதங்களுக்குள் தீர்ப்பு அளிக்குமாறு கோவை தொழிலாளர் நீதிமன்றம் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

**இணைப்பு**

**எழுவினா**

திரு. A. பிரேம்குமார் (ப.எண்C24154) தொழில்நுட்ப பணியாளருக்கு நிர்வாகம் பிறப்பித்த 10–12–2017 நாளிட்ட உத்தரவுப்படி தற்காலிக பணிநீக்கத்திலிருந்த 05–10–2017 முதல் 07–10–2017 வரையிலான மூன்று நாட்களை விடுப்பு கணக்கில் உள்ள நாட்களை பொறுத்து விடுப்பாக கழித்து கொண்டதற்கும் மற்றும் வருடாந்திர ஊதிய உயர்வை ஆறுமாத காலம் பின் தொடர்ச்சியின்றி தள்ளி வைத்ததை இரத்து செய்ய வேண்டும் என்ற தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயமானதுதானா? ஆம் எனில், உரிய உத்தரவு பிறப்பிக்கவும்.

**திருவாளர்கள் கேட்வே டிஸ்டிரிபார்க்ஸ் (தெற்கு) பிரைவேட் லிட், மணலி, சென்னை.**

*[அரசாணை (டி) எண் 732, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (அ1)த் துறை, 12 டிசம்பர் 2019, கார்த்திகை 26, விகாரி, திருவள்ளுவர் ஆண்டு–2050.]*

No.II(2)/LE/45/2020.—இந்த ஆணையின் இணைப்பில் குறிப்பிட்டுள்ள பொருள் தொடர்பாக, திருவாளர்கள் கேட்வே டிஸ்டிரிபார்க்ஸ் (தெற்கு) பிரைவேட் லிட், மணலி, சென்னை என்ற நிர்வாகத்திற்கும் சென்னை ஏற்றுமதி வளாக ஊழியர்கள் மற்றும் பொதுத்தொழிலாளர் சங்கம் என்ற தொழிற்சங்கத்திற்குமிடையே தொழிற்தகராறு எழுந்துள்ளது என்று அரசு கருதுவதாலும்;

மேற்சொன்ன தகராறை தொழிலாளர் நீதிமன்றத் தீர்ப்புக்காக அனுப்புவது அவசியமென்று தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் கருதுவதாலும்;

1947–ஆம் ஆண்டு தொழிற்தகராறுகள் சட்டத்தின் (மத்திய சட்டம் XIV/1947) 10(1)(c) பிரிவிலும், 10(1)(d) பிரிவின் வரம்பு நிபந்தனையிலும் வழங்கியுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் மேற்சொன்ன தகராறு, சென்னை, தொழிலாளர் நீதிமன்றத் தீர்ப்புக்காக அனுப்பப்பட வேண்டும் என்று இதனால் ஆணையிடுகிறார்.

மேலும், 1947–ஆம் ஆண்டு தொழிற்தகராறுகள் சட்டத்தின் 10(2A) பிரிவின்கீழ், இந்த ஆணையைப் பெற்றுக்கொண்ட நாளிலிருந்து மூன்று மாதங்களுக்குள் தீர்ப்பு அளிக்குமாறு சென்னை தொழிலாளர் நீதிமன்றம் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

**இணைப்பு**

**எழுவினாக்கள்**

**கோரிக்கை எண் 1.**

"திரு. செந்தில்நாதன் (E.No. 0024) என்பவரை 30–01–2015 அன்று முதல் பணிநீக்கம் செய்யப்பட்டதை இரத்து செய்து அவருக்கு மீண்டும் பணியும், பணி வழங்காத நாட்களுக்கு ஊதியமும் வழங்க வேண்டும் என்று கோரும் தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயமானதுதானா? ஆம் மெனில், உரிய உத்தரவு பிறப்பிக்கவும்."

**கோரிக்கை எண் 2.**

"திரு. சி. பிரோஸ் என்பவருக்கு (TLT Operator) மீண்டும் பணியும், பணி மறுக்கப்பட்ட காலத்திற்கு ஊதியமும் வழங்க வேண்டும் என்று கோரும் தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயமானது தானா? ஆமெனில் உரிய உத்தரவு பிறப்பிக்க.

**கோரிக்கை எண் 4.**

"எதிர்மனுதாரர் நிறுவன தொழிலாளர்களை கீழ்க்கண்ட கிரேடுகளில் நியமனம் செய்து அதற்கான சம்பள ஏற்ற முறையில் ஊதியம் வழங்க கோரும் தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயம் தானா? ஆம் எனில் உரிய உத்தரவு பிறப்பிக்கவும்."

| | | |
|---|---|---|
| 1. | TLT-OPERATOR (SR) - | 9000-800-13000-1000-18000-1200-24000- 1500-31500-1750 |
| | TLT-OPERATOR | 7500-600-10500-800-14500-1000-19500-1250-2570-1500 |
| 2. | FLT-OPERATOR (SR) - | 7000-800-11000-1000-16000-1200-22000- 1400-19000-1600 |
| | FLT-OPERATOR | 6500-600-9500-800-1350-1000-18500- 1200-24500-1400 |
| 3. | MECHANICS (SR) | 10000-1000-15000-1250-12150-1600- 29250-2050-39500-2600 |
| | MECHANICS | 7000-800-11000-1000-16000-1200-22000-1400-29000-1600 |

| | | |
|---|---|---|
| 4. | SUPERVISOR (SR) | 7500-600-10500-800-14500-1000-19500- 1250-25750-1500 |
| | SUPERVISOR | 6500-500-9000-700-12500-900-17000- 1100-22500-1300 |
| 5. | ELECTRICAN | 9000-800-13000-1000-18000-1200-24000- 1500 - 31500-1750 |
| 6. | TALLY CLERK (SR) | 5000-500-7500-600-10500-800-14500- 1000-19500-1200 |
| | TALLY CLERK | 4500-400-6500-600-9500-800-13500-1000- 18500-1200 |
| 7. | TLT -FLT CLEANER | 3500-400-5500-600-8500-700-12000-800- 14000-1000 |
| | HELPER | |
| 8. | STORE KEEPER | 4500-400-6500-600-9500-800-13500-1000- 18500-1200 |

**கோரிக்கை எண் 5.**

“1960–ம் ஆண்டு விலைவாசி புள்ளியின் அடிப்படையில் 3000 புள்ளிகளுக்கு ரூ. 4,000/– எனவும், அதற்கு மேல் உயரும் ஒவ்வொரு புள்ளிக்கும் தலா ரூ. 3/– வழங்க வேண்டும் என்ற தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயம் தானா? ஆம் எனில் உரிய உத்தரவு பிறப்பிக்கவும்.”

**கோரிக்கை எண் 6.**

“ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி மாத அடிப்படை சம்பளம் மற்றும் பஞ்சப்படி கூட்டு தொகையில் வாடகைப்படியாக 30%–ம், கண்வெயின்ஸ் அலவன்ஸ்ல் 20%–ம், மெடிக்கல் அலவன்ஸாக 30%–ம், லீவ் டிராவல் அலவன்ஸாக 10%–ம், ஜெனரல் அலவன்ஸாக 10%–ம் வழங்க கோரும் தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயமானது தானா? ஆம் எனில் உரிய உத்தரவு பிறப்பிக்கவும்.”

**கோரிக்கை எண் 7.**

"3வது ஷிப்ட்டில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு அடிப்படை சம்பளத்தில் 25%–ம், 2வது ஷிப்ட்டில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு 15%–ம் ஷிப்ட் அலவன்சாக வழங்க வேண்டும் என்ற தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயம் தானா?" ஆம் எனில் உரிய உத்தரவு பிறப்பிக்கவும்.

**கோரிக்கை எண் 9.**

“இரவு ஷிப்டில் பணி செய்யும் தொழிலாளர்களுக்கு Night Shift அலவன்ஸ்சாக நாளொன்றுக்கு தலா ரூ. 50/– வழங்க வேண்டும் என்ற தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயம் தானா? ஆம் எனில் உரிய உத்தரவு பிறப்பிக்கவும்.

**கோயமுத்தூர் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி, கோவை.**

*[அரசாணை (டி) எண் 739, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (டி1)த் துறை, 12 டிசம்பர் 2019, கார்த்திகை 26, விகாரி, திருவள்ளுவர் ஆண்டு–2050.]*

No.II(2)/LE/46/2020.—இந்த ஆணையின் இணைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள பொருள் தொடர்பாக, கோயமுத்தூர் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி, கோவை என்ற நிர்வாகத்திற்கும் பொதுச் செயலாளர், கோயமுத்தூர் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி ஊழியர் சங்கம், கோவை என்ற தொழிற்சங்கத்திற்குமிடையே தொழிற்தகராறு எழுந்துள்ளது என்று அரசு கருதுவதாலும்;

மேற்சொன்ன தகராறை எழுவினாவுடன் கோவை தொழிலாளர் நீதிமன்றத்தின் தீர்ப்புக்காக அனுப்புவது அவசியமென்று தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் கருதுவதாலும்;

1947–ஆம் ஆண்டு தொழிற்தகராறுகள் சட்டத்தின் (மத்திய சட்டம் XIV/1947) 10(1)(c) பிரிவிலும், 10(1)(d) பிரிவின் வரம்பு நிபந்தனையிலும் வழங்கியுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் மேற்சொன்ன தகராறை எழுவினாவுடன் கோவை தொழிலாளர் நீதிமன்றத்தின் தீர்ப்புக்காக அனுப்பப்பட வேண்டும் என்று இதனால் ஆணையிடுகிறார்.

மேலும், 1947–ஆம் ஆண்டு தொழிற்தகராறுகள் சட்டத்தின் 10(2A) பிரிவின்கீழ், இந்த ஆணையைப் பெற்றுக்கொண்ட நாளிலிருந்து மூன்று மாதங்களுக்குள் தீர்ப்பு அளிக்குமாறு கோவை தொழிலாளர் நீதிமன்றம் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

**இணைப்பு**

**எழுவினா**

திரு. ஏ. ரவி, உதவி மேலாளருக்கு பத்தாண்டுகள் ஊதிய உயர்வு திரண்ட பயனுடன் நிறுத்தம் (10 Years with cumulative effect) செய்து நிர்வாகம் வழங்கிய 26–06–2018 நாளிட்ட உத்தரவினை ரத்து செய்ய வேண்டும் என்ற தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயமானதா? ஆம் எனில், உரிய உத்தரவு பிறப்பிக்கவும்.

**தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (திருநெல்வேலி) லிமிடெட்., நாகர்கோவில்.**

*[அரசாணை (டி) எண் 742, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (பி1)த் துறை, 16 டிசம்பர் 2019, கார்த்திகை 30, விகாரி, திருவள்ளுவர் ஆண்டு–2050.]*

No.II(2)/LE/47/2020.—இந்த ஆணையின் இணைப்பில் குறிப்பிட்டுள்ள பொருள் தொடர்பாக, தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (திருநெல்வேலி) லிமிடெட், நாகர்கோவில் என்ற நிர்வாகத்திற்கும் கன்னியாகுமரி மாவட்ட பாரதீய அரசு போக்குவரத்து தொழிலாளர் சங்கம், நாகர்கோவில் என்ற தொழிற்சங்கத்திற்குமிடையே தொழிற்தகராறு எழுந்துள்ளது என்று அரசு கருதுவதாலும்;

மேற்சொன்ன தகராறை நீதிமன்ற தீர்ப்புக்காக அனுப்புவது அவசியமென்று தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் கருதுவதாலும்;

1947–ஆம் ஆண்டு தொழிற்தகராறுகள் சட்டத்தின் (மத்திய சட்டம் XIV/1947) 10(1)(c) பிரிவிலும், 10(1)(d) பிரிவின் வரம்பு நிபந்தனையிலும் வழங்கியுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் மேற்சொன்ன தகராறை, திருநெல்வேலி தொழிலாளர் நீதிமன்றத் தீர்ப்புக்காக அனுப்பப்பட வேண்டும் என்று இதனால் ஆணையிடுகிறார்.

மேலும், 1947–ஆம் ஆண்டு தொழிற்தகராறுகள் சட்டத்தின் 10(2A) பிரிவின்கீழ், இந்த ஆணையைப் பெற்றுக்கொண்ட நாளிலிருந்து மூன்று மாதங்களுக்குள் தீர்ப்பு அளிக்குமாறு திருநெல்வேலி தொழிலாளர் நீதிமன்றத்தை கேட்டுக்கொள்ளப்படுகிறது.

**இணைப்பு**

**எழுவினா**

திரு. R. வினு, சேமநடத்துநருக்கு (பணி எண். 50860) சேமகாலத்தை மேலும் மூன்று (3) வருடம் தள்ளி வைத்து நிர்வாகம் பிறப்பித்த 21–11–2017 நாளிட்ட உத்தரவை இரத்து செய்ய வேண்டும் என்ற தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயமானதுதானா? ஆம் எனில், உரிய உத்தரவு பிறப்பிக்கவும்.

**தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், மதுரை லிமிடெட், திண்டுக்கல் மண்டலம், திண்டுக்கல்.**

*[அரசாணை (டி) எண் 744, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (பி1)த் துறை, 16 டிசம்பர் 2019, கார்த்திகை 30, விகாரி, திருவள்ளுவர் ஆண்டு–2050.]*

No.II(2)/LE/48/2020.—இந்த ஆணையின் இணைப்பில் குறிப்பிட்டுள்ள பொருள் தொடர்பாக, தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (மதுரை) லிமிடெட் திண்டுக்கல் என்ற நிர்வாகத்திற்கும், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் RMTC ஒர்க்கர்ஸ் யூனியன், ஏஐடியுசி, திண்டுக்கல் மண்டலம் என்ற தொழிற்சங்கத்திற்குமிடையே தொழிற் தகராறு எழுந்துள்ளது என்று அரசு கருதுவதாலும்;

மேற்சொன்ன தகராறை நீதிமன்ற தீர்ப்புக்காக அனுப்புவது அவசியமென்று தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் கருதுவதாலும்;

**1947–ஆம்** ஆண்டு தொழிற்தகராறுகள் சட்டத்தின் (மத்திய சட்டம் XIV/**1947) 10(1)(c)** பிரிவிலும், **10(1)(d)** பிரிவின் வரம்பு நிபந்தனையிலும் வழங்கியுள்ள அதிகாரங்களைக் கொண்டு தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் மேற்சொன்ன தகராறை திருச்சிராப்பள்ளி தொழிலாளர் நீதிமன்றத் தீர்ப்புக்காக அனுப்பப்பட வேண்டும் என்று இதனால் ஆணையிடுகிறார்.

மேலும், **1947–**ஆம் ஆண்டு தொழிற்தகராறுகள் சட்டத்தின் **10(2A)** பிரிவின்கீழ், இந்த ஆணையைப் பெற்றுக்கொண்ட நாளிலிருந்து மூன்று மாதங்களுக்குள் தீர்ப்பு அளிக்குமாறு திருச்சிராப்பள்ளி தொழிலாளர் நீதிமன்றத்தை கேட்டுக்கொள்ளப்படுகிறது.

**இணைப்பு**

**எழுவினா**

திரு. P. மீனாட்சிசுந்தரம், சேம ஓட்டுநருக்கு (பணி எண். **95983)** தினக்கூலி பணிக்காலத்தை இரண்டு **(2)** வருட காலத்திற்கு நீடிப்பு செய்து நிர்வாகம் வழங்கிய **31–08–2017** நாளிட்ட உத்தரவை ரத்து செய்ய வேண்டும் என்ற தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயமானதா**?** ஆம் எனில், உரிய உத்தரவு பிறப்பிக்கவும்.

முகமது நசிமுத்தின்,
*கூடுதல் தலைமைச் செயலாளர்.*

Verified RealEstate

PRINTED AND PUBLISHED BY THE DIRECTOR OF STATIONERY AND PRINTING, CHENNAI
ON BEHALF OF THE GOVERNMENT OF TAMIL NADU